செ.வெ.எண்:30 நாள்: 20.06.2020

**கரூர் மாவட்டம்**

**வெளிநாடு, வெளிமாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து கரூர் மாவட்டத்திற்கு வருகைதரும் நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

அதன் விபரம் வருமாறு:

வெளிநாடு, வெளிமாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து கரூர் மாவட்டத்திற்கு வருகைதரும் நபர்கள் அரசு மருத்துவமனைகளிலும், தளவாபாளையத்தில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியிலும், அவரவர் விருப்பத்தின்பேரில் சொந்த செலவில தனியார் தங்கும் விடுதிகளிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், தளவாபாளையத்தில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் இன்று (20.06.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனைத்தொடர்ந்து அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள நபர்களிடம் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் போதுமான வகையில் செய்யப்பட்டுள்ளதா என்றும், உணவு சரியான நேரத்தில் தரப்படுகின்றதா என்றும், தரமானதாக இருக்கின்றதா என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விரிவாக கேட்டறிந்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கெரோனா தொற்று பரவாமல் தடுக்கும் வகையில், கரூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றது.

வெளிநாடு, வெளிமாநிலம் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து கரூர் மாவட்டத்திற்கு வருகை தருபவர்களை தனிமைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. இவர்களை தனிமைப்படுத்துவதற்காக, குளித்தலை அரசு மருத்துவமனையில் 91 படுக்கைகளும், வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனையில் 60 படுக்கைகளும், மயிலம்பட்டி அரசு மருத்துவமனையில் 66 படுக்கைகளும், மண்மங்கலம் அரசு மருத்துவமனையில் 60 படுக்கைகளும், அரவக்குறிச்சி அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகளும், பள்ளப்பட்டி அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகளும், தயார் நிலையில் உள்ளது. அதுமட்டுமல்லாது தளவாபாளையத்தில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் 87 அறைகளில் 348 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்சொன்ன தனிமைப்படுத்தும் இடங்களில் தங்கும் நபர்களுக்கு உணவு இலவசமாக வழங்கப்படுகின்றது. அனைவரையும் 24 மணிநேரமும் சுகாதாரத்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பில் வருகின்றனர். சிலர் தங்களது சொந்த செலவில் தனியார் தங்கும் விடுதிகளில் தங்க விருப்பம் தெரிவிக்கும்பட்சத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களில் மருத்துவபரிசோதனையின் போது தொற்று உறுதிசெய்யப்பட்டவர்கள் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவார்கள்.

முதல் பரிசோதனையில் தொற்று அல்லாதவர்களாக கருதப்படுபவர்கள் ஏழு நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற அரசு விதிமுறையின் படி அனைவரும் தனிமைப்படுத்தபடுகின்றனர். ஏழுநாள் முடிந்து அவர்களுக்கு மீண்டும் ஒரு பரிசோதனை செய்யப்பட்டு அந்தப்பரிசோதனையிலும் அவர்களுக்கு தொற்று இல்லை என்பது உறுதி செய்ப்பட்ட பின்னரே அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். பின்னர் அவர்கள் வீடுகளில் ஒரு வார காலம் தங்களை தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்கள் கரூர் அரசு மருத்துவக்கல்லூரியில் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இதற்காக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 1000 படுக்கைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தொற்று பாதிப்பு அதிகம் உள்ளதாக கருதப்படும் வெளிநாடு, வெளிமாநிலம் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து கரூர் மாவட்டத்திற்கு வருகை தந்தவர்களாக இதுவரை 359 நபர்கள் கண்டறியப்பட்டு, 316 நபர்கள் மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தனிமைப்படுத்தும் இடங்களான அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் பொறியில் கல்லூரியிலும், 43 நபர்கள் தங்களது சொந்த செலவில் தனியார் தங்கும் விடுதிகளிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ஏழுநாட்கள் தனிமைப்படுத்துதலுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று இல்லை என்று உறுதிசெய்யப்பட்ட 52 நபர்கள் அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு ஒருவார காலம் தங்களை தனிமைப்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருமே சுகாதாரத்துறை அலுவலர்களின் தொடர் கண்காணிப்பில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஊராட்சிப்பகுதிகள், நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் எவரேனும் வெளிநாடு, வெளிமாநிலம் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து வந்துள்ளார்களா என்பது குறித்து கண்டறியும் பணிகளில் சுகாதாரத்துறையினர், வருவாய்த்துறையினர், வளர்ச்சித்துறையினர், காவல் துறையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார்கள். பொதுமக்கள் தங்கள் பகுதியில் இதுபோன்று எவரேனும் வந்திருந்து தங்களை மருத்துவப்பரிசோதனைக்கு உட்படுத்தாமல் இருப்பது தெரியவந்தால் உடனடியாக 04324-1077 என்ற கட்டுப்பாட்டு அறை எண்ணிற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரவிக்கலாம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, ஊராட்சிகளுக்கான உதவி இயக்குநர் திரு.உமாசங்கர், புகளூர் வட்டாட்சியர் திரு.சிவக்குமார் உள்ளிட்ட அலுவலர்கள், மருத்துவர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.